புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2052 அக்டோபர் 21, 2021 புரட்சி 20 முழக்கம் 34 விலை: ரூ.3.00

# ஜாதி வெறியர்களால் பிரிக்கப்பட்ட காதல் இணையர் ஒன்றரை ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் இணைந்தனர்

# கழகத்தின் தொடர் போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றி

*ஈரோடு மாவட்டம் பவானி அருகே உள்ள குருப்பநாயக்கம்பாளையம் பகுதியைச் சேர்ந்த இளமதி, 23 (வன்னியர்), கவுந்தப்பாடி பகுதியைச் சேர்ந்த செல்வன், 25 (அருந்ததியர்) ஆகியோர் ஒருவரையொருவர் காதலித்தனர். இவர்களின் சுயமரியாதைத் திருமணம் காவலாண்டியூரில் 09.03.2020 அன்று திராவிடர் விடுதலைக் கழகத் தலைமைக் குழு உறுப்பினர் காவலாண்டியூர் ஈஸ்வரன் தலைமையில், கழகத் தோழர்கள் முன்னிலையில் நடைபெற்றது.*

ஜாதியை காரணம் காட்டி பெண்ணின் பெற்றோர் திருமணத்திற்கு சம்மதம் தெரிவிக்காததாலும், அச்சுறுத்தலில் ஈடுபட்டதாலும் கழகத் தோழர்களே திருமணம் செய்த இணையரை பாதுகாப்பாக வைத்திருந்தனர். இதனையறிந்த மணமகள் உறவினரான ஜாதி வெறிக்கும்பல் 40க்கும் மேற்பட்டோர் 9.03.2020 அன்று சுமார் 10 மணியளவில் கழகத் தோழர் காவலாண்டியூர் ஈசுவரன் வீட்டிற்குள் அரிவாள், கத்தி போன்ற பயங்கர ஆயுதங்களுடன் நுழைந்து அவரைக் கடுமையாக தாக்கி கத்திமுனையில் கடத்திச் சென்றனர்.

அதேபோல வேறு இடத்தில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டிருந்த இணையர்களையும் தேடிச் சென்று பலவந்தமாக கடத்திச் சென்று, மூவரையும் அடையாளம் தெரியாத பகுதிக்கு அழைத்துச் சென்று கடுமையாகத் தாக்கினர். மூவரையும் கொலை செய்யும் நோக்கத்துடன் இரவில் கடத்திச் சென்றனர்.

மூவரும் கடத்தப்பட்ட தகவலறிந்து திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் உடனடியாக கொளத்தூர் காவல் நிலையத்தில் குவிந்தனர். காவலாண்டியூர் ஈஸ்வரன் மற்றும் இணையர்களை உடனடியாக மீட்க வேண்டும், கடத்தலில் ஈடுபட்ட ஜாதி வெறியர்களை கைது செய்ய வேண்டுமென கொளத்தூர் காவல் நிலையத்தை முற்றுகையிட்டு கழகத் தோழர்கள் விடிய விடிய போராட்டம் நடத்தினர். திருப்பூர் நிகழ்வுகளை முடித்துக் கொண்டு கழகத் தலைவர் கொளத்தூர் மணியும் நள்ளிரவே காவல் நிலையம் விரைந்தார்.

இதன் விளைவால் திராவிடர் விடுதலைக் கழக தலைமைக் குழு உறுப்பினர் காவை ஈஸ்வரன் மற்றும் மணமகன் செல்வனை நள்ளிரவுக்குப்பின் போலீசார் மீட்டனர். மணமகள் இளமதி ஜாதி வெறிக்கும்பலிடம் இருந்து மீட்கப்படவில்லை. இளமதியை மீட்கக்கோரி கொளத்தூர் காவல் நிலையத்தில் கழகத் தோழர்கள் போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி மற்றும் கழகத் தோழர்கள் தாக்குதல் சம்பவம் நடந்த 09.03.2020 நள்ளிரவு முதல் அடுத்த நாள் காலை வரை காவல் நிலையத்தை முற்றுகையிட்டு போராடியதன் விளைவாக மணமகன் செல்வன் கொடுத்த புகாரின் அடிப்படையில் கொலை முயற்சி, ஆள் கடத்தல், கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்ட இளமதியின் தந்தை, பெரியப்பா, மாமா உள்ளிட்ட 18 பேர் கைது செய்யப்பட்டு தீண்டாமை வன்கொடுமைச் சட்டம் மற்றும் கொலை முயற்சி, ஆள் கடத்தல்,கொள்ளை ஆகிய குற்றங்களுக்காக மணமகன் செல்வன் கொடுத்த புகாரின் அடிப்படையில் கொளத்தூர் காவல் நிலைய குற்ற எண் 49/2020 ன் படி

SC/ST (PoA) Act 3 (1) R.S. 3(2) V -341, 363, 365, 323, 342, 379, 506(2) - பிரிவுகளில் வழக்கு தொடர்ந்தனர்.

கழகத் தலைமைக் குழு உறுப்பினர் காவலாண்டியூர் ஈஸ்வரன் கொடுத்த புகாரில் கொளத்தூர் காவல் நிலைய குற்ற எண் 48/2020 ன்படி 147, 448, 323, 365, 342, 379, 506(2) ஆகிய பிரிவுகளிலும் வழக்குப் பதிவு செய்யப்பட்டு 18 பேரும் சிறையில் அடைக்கப்பட்டார்கள். மணமகள் இளமதியை நேரடியாக நீதிமன்றத்திற்குத் தான் அழைத்து வந்தார்கள்.

தொடர்ந்து, ஜாதி வெறியர்களின் போக்கைக் கண்டித்து, 11.03.2020 அன்று சென்னை, கோவை, மதுரை உள்ளிட்ட இடங்களில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

நீண்ட போராட்டத்துக்குப் பிறகு ஒரு வருடம் ஏழு மாதங்கள் கழித்து, 14.10.2021 அன்று இளமதி - செல்வன் ஜாதி மறுப்பு இணையர் வாழ்வில் இணைந்தனர். பெற்றோரின் பிடியிலிருந்த இளமதி - ஒன்றரை வருடங்களுக்குப் பிறகு கணவர் செல்வனுக்கு அலைபேசி வழியாக குரல்வழித் தகவல் செய்தி ஒன்றை அனுப்பி, “தனக்கு பெற்றோருடன் இருக்க விருப்பமில்லை; தங்களிடம் வரவே விரும்புகிறேன்” என்று கூறினார். அத்தகவலை ஈரோடு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் வி.சசிமோகன் அவர்களுக்கு செல்வன் நேரில் அளித்தார். உடனே காவல்துறை அதிகாரி பெண் வீட்டுக்கு காவல்துறையினரை அனுப்பி, அவரை அழைத்து வரச் செய்து தனி அறையில் தங்க வைத்தார். அடுத்த நாள் பெண்ணிடம் கேட்டபோது நான் என் கணவருடன் தான் செல்வேன்; பெற்றோரிடம் திரும்பப் போவதில்லை என்று உறுதியாக தெரிவித்தார். ஈரோடு கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இந்த வழக்கில் தீவிர ஆர்வம் காட்டி வாதிட்ட வழக்கறிஞர் ப.பா. மோகன், ஈரோடு இரத்தினசாமி, ஈரோடு வடக்கு மாவட்டத் தலைவர் நாத்திகஜோதி (கோபி), நங்கவள்ளி கிருஷ்ணன், உள்ளிட்ட ஏராளமான தோழர்களும்திரண்டிருந்தனர். பெண் சிறையிலிருந்து வெளியே வந்தவுடன் வாழ்த்து முழக்கங்களுடன் வரவேற்று, ‘ஜாதி ஒழிக; ஜாதி ஆணவப் படுகொலை களை முறியடிப்போம்; பெரியார் வாழ்க!’ என்று முழக்கமிட்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம், பெற்றோர்களே சம்மதித்து அனுப்பி வைத்ததாகவும் இளமதி பேட்டியளித்தார். “நாங்க இரண்டு பேரும் காதலித்தோம், ஆனால் எங்கள் வீட்டில் ஜாதியை காரணம் காட்டி வேண்டாம் என்றார்கள். நாங்கள் திருமணம் செய்து கொண்டோம். அப்போதும் எங்களை பிரித்து விட்டார்கள். தற்போது அப்பா, அம்மா இருவரும் சம்மதத்தோடு தான் என்னை அனுப்பி வைத்தார்கள். பெற்றோர் சம்மதித்தாலும் ஜாதியமைப்பினரும் ஜாதி உறவினருமே அச்சுறுத்தி எங்களைப் பிரித்தனர். ஒன்றரை ஆண்டுகள் கழித்து செல்வனுடன் இணைவது எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது. இருவரும் சேர்ந்து வெற்றிகரமான வாழ்க்கையை வாழ்வோம்” என்று அவர் மகிழ்ச்சியுடன் பேட்டியளித்தார்.

இணையர்களின் வழக்கைத் வழக்கறிஞர் ப.பா.மோகன் தொடர்ந்து நடத்தினார்.


இணையருடன்
வழக்கறிஞர் ப.பா. மோகன்

## கழகத்துக்கு நன்றி தெரிவித்து செல்வன் முகநூல் பதிவு

மணமகன் செல்வன், கழகத்தின் செயல்பாடுகளை முகநூல் வழியாகத் தொடர்ந்து கண்காணித்து, பெரியாரியல் இயக்கங்களிலேயே ஜாதி எதிர்ப்புக் களத்தில் நிற்கும் சரியான இயக்கம் இது ஒன்று தான் என்று முடிவுக்கு வந்த பின் செல்வனும் அவரது தம்பியும், கழக வெளியீட்டுச் செயலாளர் கோபி இராம இளங்கோவனை சந்தித்து கழகத்தில் இணைத்துக் கொண்டனர். தொடர்ந்து கழகத்தின் ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்று வந்திருக்கிறார். அதேபோல அவரது ஜாதி மறுப்பு காதலுக்கு ஜாதிவெறியர்களிடமிருந்து பிரச்சினை வந்தவுடன் கழகத் தோழர்களே அவர்களுக்கு அடைக்கலம் தந்து உதவினார்கள். வழக்கு நடத்துவதற்கான முயற்சிகளையும் கழகத் தலைவர் வழியாக கழகமே ஏற்பாடு செய்தது. தலைமைக் கழக உறுப்பினர் காவலாண்டியூர் ஈசுவரன் நள்ளிரவில் வீட்டில் தனியாக இருந்தபோது ஜாதி வெறியர்கள் கடத்திச் சென்று ஒரு பள்ளியில் வைத்து கொடூரமாகத் தாக்கினர். தொடர் போராட்டம் இப்போது வெற்றி பெற்றுள்ளது. இது குறித்து இணையரில் ஒருவராகிய செல்வன் கழகத்துக்கு நன்றி தெரிவித்து முகநூலில் வெளியிட்டுள்ள பதிவு.

“நாடகக் காதல் தோற்றது. உண்மையான காதல் வென்றது. எங்களுக்கு உறுதுணையாக இருந்த அனைத்து பெரியாரிய, அம்பேத்காரிய, மார்க்சிய, முற்போக்குத் தோழர்களுக்கும் நன்றிகள். இறுதி வரை எனக்கு உறுதியாக களத்தில் துணை நின்ற தி.வி.க. தோழர்களுக்கும் தலைவர் தோழர் கொளத்தூர் மணி அண்ணன் அவர்களுக்கும் வழக்கறிஞர் ஐயா ப.பா. மோகன் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.

வெல்லட்டும் திராவிடம்! வாழ்க பெரியார்! வாழ்க அம்பேத்கர்! வாழ்க மார்க்ஸ்!”

## நேர்மையான காவல்துறை அதிகாரி வி. சசிமோகனுக்கு குவியும் பாராட்டுகள்



காவல்துறையில் சில நேர்மையான அதிகாரிகள் உறுதியுடன் செயல்பட்டு வருகிறார்கள். அவர்களில் ஒருவர் தான் ஈரோடு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் வி. சசிமோகன். அவர்தான் இப்பிரச்சினையில் உடனடியாக நடவடிக்கை எடுத்து பெண்ணை அழைத்து வரச் செய்து கருத்தைக் கேட்டு, விரும்பியவாறே காதலுடன் அனுப்பி வைத்தார். காவல்துறை அதிகாரி வி.சசிமோகனை அனைவரும் பாராட்டுகிறார்கள். வழக்கறிஞர் ப.பா. மோகன், கழகத் தோழர்களோடு இணைந்து இந்த வழக்கில் மிகுந்த ஆர்வம் காட்டி இருவரையும் இணைத்து வைப்பதில் தொடர்ந்து செயல்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தலையங்கம்

## அறநிலையத் துறை அறிவிப்பைத் திரும்பப் பெற வேண்டும்

இந்து அறநிலையத் துறையின் கீழ் உள்ள மயிலாப்பூர் கபாலீசுவரன் கோயில் நிதியிலிருந்து சென்னை கொளத்தூரில் அரசு கலைக் கல்லூரி ஒன்றைத் தொடங்க, தமிழக அரசு முடிவெடுத்திருப்பது பாராட்டி வரவேற்க வேண்டிய முயற்சி. அதற்கான ஆசிரியர், ஆசிரியர் அல்லாத பணியிடங்களுக்கு விண்ணப்பங்களைக் கோரி இருக்கிறது. இதில் ‘இந்துக்கள்’ மட்டுமே விண்ணப்பிக்க முடியும் என்று நிபந்தனை விதித்திருப்பது சர்ச்சைகளை உருவாக்கியிருக்கிறது.

தமிழ்நாடு இந்து அறநிலையத் துறை சட்டத்துக்கான 10ஆவது விதி, கோயில் அதிகாரிகள், பணியாளர்களாக ‘இந்து’க்கள் மட்டுமே நியமிக்கப்பட வேண்டும் என்றிருப்பதைச் சுட்டிக்காட்டுகிறார்கள் அறநிலையத் துறை அதிகாரிகள். கல்லூரிகள் கோயில்களின் மத நடவடிக்கைகளின் கீழ் வராதவை. அனைவருக்கும் கல்வி வழங்கி, எதிர்காலத் தலைமுறைகளை உருவாக்கும் நிறுவனம். அதற்கு எப்படி இந்த விதி பொருந்தும் என்ற கேள்வி எழுகிறது. இதற்கு, கோயில் நிதியைக் கொண்டு, ‘தர்ம அறக்கட்டளை’ வழியாக நடத்தப்படுவதால் ‘இந்துக்கள்’ மட்டுமே என்ற விதிக்கு உட்பட்டு விடுகிறது என்கிறார்கள் அதிகாரிகள்.

தமிழ்நாடு பொதுப் பள்ளி அமைப்பின் நிர்வாகிகள் இந்த விதிகளை ஏற்கவியலாது என்று மறுத்துள்ளனர். இந்துக்களுக்காக நடத்தப்படும் மத நிறுவனம் வேறு; கோயில் நிதி வழியாக நடத்தும் கல்வி நிறுவனங்கள் வேறு; இரண்டையும் ஒன்றாகக் கருதிட முடியாது. கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள், பணியாளர்கள் ‘இந்து’க்களாகவே இருக்க வேண்டும் என்ற விதி கல்வி நிறுவனங்களுக்குப் பொருந்தாது. எனவே இந்த அறிவிப்பைத் திரும்ப பெற வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்கள். இது நியாயமான செயல்படுத்த வேண்டிய கோரிக்கை என்பதே நமது உறுதியான கருத்து.

இந்துக் கோயில்களில் நிர்வாக அதிகாரிகள் மற்றும் பணியாளர்களாக இந்து ஆண்கள் மட்டுமே இருக்க வேண்டும்; இந்து பெண்களுக்கு உரிமையில்லை என்ற நிலை, 15 ஆண்டுகளுக்கு முன் இருந்தது. பெரியார் திராவிடர் கழகம் சார்பில் வழக்கறிஞர் துரைசாமி, இப்படி வந்த ஒரு அரசு அறிவிப்பை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து, இந்துப் பெண்களும் அதிகாரிகளாக முடியும் என்று தீர்ப்பைப் பெற்றுத் தந்தார். அதன் பிறகு தான் அறநிலையத் துறையில் பல பெண்கள் உயர் அதிகாரிகளாக நுழைந்து பணியாற்றி வருகிறார்கள்.

அறநிலையத் துறைச் சட்டத்தின் 6(5)ஆவது பிரிவு இந்து அறக்கட்டளைகள் வழியாக நடத்தப்படும் சத்திரங்கள், ஓய்வு விடுதிகள், பாடசாலைகள், ஏழைகளைப் பாதுகாக்கும் இல்லங்களில்கூட இந்துக்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் என்று இருப்பதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர். அப்படி ஒரு விதி இருந்தால் மாற்றப்பட வேண்டும். கோயில்கள் நடக்கும் ‘அன்னதானத்தில்’ கூட இஸ்லாமியர், கிறிஸ்தவர் சாப்பிடக் கூடாது; இந்துக்கள் மட்டுமே சாப்பிட வேண்டும் என்றுகூட எதிர்காலத்தில் வாதிடலாம்.

இந்து அறநிலையத் துறை நடத்தும் பள்ளி மற்றும் கல்லூரிகள் மதம் தொடர்பான நிகழ்வுகளில் ஈடுபடவில்லை. மாணவர்களாக அனைத்துப் பிரிவினருமே சேர்க்கப்படு கிறார்கள். எனவே, கல்வி நிறுவனங்களை அறநிலையத் துறை நடத்துவதால் மத நிறுவனங்களோடு சமப்படுத்த முடியாது என்று முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி கே. சந்துரு கூறியிருக்கிறார். அரசியல் சட்டத்தின் 16ஆவது பிரிவு வேலை வாய்ப்புகளில் சமத்துவத்தை வலியுறுத்தும் பல பிரிவுகளை உள்ளடக்கியிருக்கிறது. இதில் 16(5) பிரிவு மதம் அல்லது மதக் குழுவினரோடு தொடர்புடைய நிறுவனங்களின் நிர்வாகக் குழுவின் பணிகளிலும் நியமிக்கப்படுவோர் ஒரு குறிப்பிட்ட மதத்தைப் பின்பற்றுவோராக இருக்க வேண்டும் என்றோ, அல்லது ஒரு குறிப்பிட்ட மதத்தில் பிறந்தவராக இருக்க வேண்டும் என்றோ அவசியமில்லை. அது சட்டத்துக்கு எதிரானது அல்ல என்று கூறியிருப்பதை நீதிபதி சந்துரு எடுத்துக்காட்டியுள்ளதோடு, இந்த 16(5)ஆவது பிரிவு வழங்கும் உரிமையைப் பயன்படுத்தி, இந்த அரசாணையை மாற்றி அமைக்கலாம் என்றும் கருத்து தெரிவித்துள்ளார். தொல் பொருள் ஆய்வுத் துறையில் கே.பி.ஏ. நல்லா முகம்மது என்ற இஸ்லாமியர் நியமிக்கப்பட்டதை எதிர்த்து தம்மிடம் வந்த வழக்கில் கல்வெட்டு, தொல் பொருள் ஆராய்ச்சிகளில் ஈடுபடுவோர் இந்து மதத்தைச் சார்ந்திருக்க வேண்டும் என்ற அவசியமில்லை; இது கோயில்களுக்கு வெளியே நாடு முழுதும் நடக்கும் பணி என்று தாம் தீர்ப்பளித்தையும் நீதிபதி சுட்டிக் காட்டியிருக்கிறார்.

ஏற்கனவே பழனி மற்றும் மேலையூரில் அறநிலையத் துறை சார்பில் நடத்தப்படும் கல்லூரிகளில் ஆசிரியர், பணியாளர் நியமனங்களில் ‘இந்து’க்கள் மட்டுமே இருக்க வேண்டும் என்ற விதிகள் பின்பற்றப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டும்.

‘சூத்திரர்’களுக்கு கல்வியைத் தரக் கூடாது என்பதே ‘இந்து’ வேத மதத்தின் கோட்பாடாக இருந்த காலத்தில் இந்தியாவுக்கு வந்த கிறிஸ்துவ நிறுவனங்கள் தான் இந்து மதத்தில் புறக்கணிக்கப்பட்ட அடித்தள மக்களுக்கு கல்வியை வழங்குவதை தங்கள் முதன்மைப் பணியாகக் கருதி தொண்டாற்றின. அவர்கள் உருவாக்கிய செயின்ட் ஜோசப், இலயோலா, சென்னை கிறிஸ்தவக் கல்லூரிகள் போன்ற பல கல்லூரிகள் நட்சத்திரக் குறியீடுகளுடன் பெருமையோடு செயல்பட்டு வருகின்றன. ஏழை எளிய மக்களுக்காகவே உருவான வேலூர் கிறிஸ்தவ கல்லூரியும் மருத்துவ மனையும் இன்று அனைத்து மத மக்களையும் அரவணைத்து சேவையாற்றி வரு கின்றது. இந்த நிறுவனங்களில் கிறிஸ்தவர்கள் மட்டும தான் பேராசிரியர்களாகவே பணியாளர்களாகவே இருக்க வேண்டும் என்ற நிபந்தனையும் இல்லை.

இந்து அறநிலையத் துறை விதிகள் காலத்தின் தேவைக்கேற்ப மாற்றியமைப்பதில் எந்தத்தவறும் இல்லை. கோயில் அதனால் புனிதம் கெட்டு விடாது.

இந்து கோயில்கள் குறித்த வழக்கு என்றால் இந்து நீதிபதிதான் விசாரிக்க வேண்டும்; கோயிலுக்கு ஏதேனும் விபத்து என்றால் அதை சரி செய்ய ‘இந்து’க்கள் மட்டுமே வரவேண்டும்; கோயில் அர்ச்சகர்களுக்கு நோய் வந்தால் இந்து டாக்டர்களிடமே போக வேண்டும் என்றெல்லாம் 2021ஆம் ஆண்டிலும் பேசிக் கொண்டிருப்பது அபத்தம்!

அறநிலையத் துறைச் சட்டம், பனகல் அரசர் காலத்தில் உருவாக்கப்பட்டு, ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் ஆட்சிக் காலத்திலும் பிறகு காமராசர் ஆட்சி காலத்திலும் பல மாற்றங்களுக்கு உள்ளாக்கப்பட்டது வரலாறு. எனவே சட்டம் சமூக நீதிக்குத் தடையாக வந்தால் அதை மாற்றித் தான் ஆக வேண்டும்.

தமிழ்நாடு அரசு தற்போது வெளியிட்டுள்ள ‘இந்து மட்டும்’ என்ற அறிவிப்பை மாற்றி வெளியிட முன் வரவேண்டும். அது சாதனைகளைக் குவித்து வரும் தி.மு.க. ஆட்சிக்கு மற்றொரு மகுடத்தைச் சூட்டும்.

பா.ஜ.க.வினர் பார்ப்பனர்கள் மிரட்டலுக்குப் பணியக் கூடாது; அவற்றை எங்களைப் போன்ற பெரியார் இயக்கங்கள் எதிர்கொண்டு, மக்கள் கருத்தை ஆட்சிக்கு ஆதரவாக உருவாக்கும்!

– புரட்சிப் பெரியார் முழக்கம் 21.10.2021

# சாவர்க்கர் – காந்தி ஆலோசனை கேட்டுத்தான் மன்னிப்புக் கோரினாரா?

சாவர்க்கர் பற்றி புதிய கதை ஒன்றை அவிழ்த்து விட்டிருக்கிறார் பாதுகாப்புத்துறை அமைச்சர் இராஜ்நாத் சிங். அவர் அந்தமான் சிறையில் அடைக்கப்பட்ட போது பிரிட்டிஷ் ஆட்சியிடம் மன்னிப்புக் கடிதங்களை எழுதிக் கொண்டே இருந்தார். 9 ஆண்டுகள் சிறை வாழ்க்கையில் 5 மன்னிப்புக் கடிதங்களை எழுதிவிட்டார். அவர் அப்படி மன்னிப்புக் கடிதங்கள் எழுதியது காந்தியார் சொன்ன ஆலோசனைப்படிதான் என்று ராஜ்நாத் இப்போது பேசியிருக்கிறார்.

காந்தி மன்னிப்பு கேட்க சொல்லாமலிருந்தால் சாவர்க்கர் வீரத்தோடு சிறைச்சாலை கொடுமைகளை சந்தித்திருப்பார் காந்தி தான் மன்னிப்பு கேட்கச் சொன்னார் என்பது போல சொல்லுகிறாரா ? அல்லது காந்தியின் பேச்சுக்கு மரியாதை தந்து சாவர்க்கர் மன்னிப்புக் கடிதம் எழுதினார் என்று சொல்ல வருகிறாரா ? ஆனால் எல்லாமே உண்மைக்கு மாறானது. சாவார்க்கார் மன்னிப்புக் கடிதம் எழுதும் படலம் 1911 ஆம் ஆண்டே துவங்கிவிடுகிறது. காந்தி 1915 ஆம் ஆண்டு தான் தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியாவிற்கே வருகிறார். தென்னாப்பிரிக்காவிலிருந்த காந்தியிடம் ஆலோசனை கேட்டு சாவர்க்கர் 1911, 1913 இல் மன்னிப்புக் கடிதம் எழுதினாரா ? இராஜ்நாத் சிங் இதற்கு பதில் சொல்ல வேண்டும்.

சாவார்க்கார் மிகச்சிறந்த தேச பக்தர். அவரது வரலாற்றை திரிக்கப் பார்க்கிறார்கள் என்கிறார் இராஜ்நாத். வரலாறுகள் எல்லாம் விரிவாகத்தான் இருக்கின்றன. அவர் துவங்கிய ’அபிநவ் பாரத்’ என்ற இரகசிய அமைப்பில் சித்பவன் பார்ப்பனர்கள் மட்டுமே உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டார்கள். ஆயுதப் புரட்சி மூலம் இந்தியாவில் இந்து இராஷ்டிரத்தை கொண்டு வருவது மட்டுமே அதன் நோக்கம். அதற்காக சாவர்க்கர் இலண்டன் சென்ற பிறகு இங்கே அந்த அமைப்பைச் சேர்ந்த அவரது சகோதரர் மற்றும் அவரது மாணாக்கர்கள் பிரிட்டிஷ் அதிகாரிகளை படுகொலை செய்கிறார்கள். இதற்கு சதித் திட்டம் வகுத்துத் தந்தவர் சாவர்க்கர். அந்த அடிப்படையில் அந்தமான் சிறையில் அடைக்கப்படுகிறார்கள் மூன்று பேரும்.

1) பிரிட்டிஷ் அதிகாரிகளை படுகொலை செய்கின்ற இந்த ஆயுதம் தாங்கிய போராட்டத்தை, இந்தியாவின் பாதுகாப்புத்துறை அமைச்சராக இருப்பவர் இந்தியாவின் தேசபக்தி என்று கூறுகிறாரா ? அப்படி என்றால் இன்றைக்கு காஷ்மீரில் துப்பாக்கி ஏந்தி படுகொலை செய்து கொண்டிருக்கக் கூடிய இயக்கவாதிகளையும் தேசபக்தி பட்டியலில் இவர் சேர்ப்பாரா ?


2) சாவார்க்கார் கடவுளை நம்பாத ஒரு நாத்திகர் என்று அவரது சுயசரிதை எழுதிய தனஞ்செய் கீர் கூறியிருக்கிறார். அதே நாத்திக கருத்தை இங்கே பேசினால் இந்து மத விரோதிகள் என்று பேசுகிறார்கள். இந்தக் கருத்தை இராஜ்நாத் சிங் ஆதரிக்கிறாரா ?

3) பசுவைப் பற்றி சாவர்க்கர் கூறியது என்ன ? பசுவை புனிதமாக வனங்குவதை கடுமையாக எதிர்த்தவர் சாவர்க்கர். அவர் இப்படி எழுதினார், ’பசு யாருக்காவது தாயாக இருக்க முடியும் என்றால் அது எருதுகளுக்குத்தான்; இந்துக்களுக்கு அல்ல. பசுமாட்டின் கால்களைப் பிடித்து தொங்கிக் கொண்டுதான் இந்துத்துவா தன்னை காப்பாற்றிக் கொள்ள முடியுமென்றால் அந்த இந்துத்துவா பலமற்றது, சிதைந்து வீழுந்து விடும்’ என்றார் சாவர்க்கார். (ஆதாரம் 1930 இல் வெளிவந்த பாலா மராட்டிய இதழுக்கு சாவர்க்கார் அளித்த பேட்டி. இதன் ஆங்கில வடிவத்தை டைம்ஸ் ஆஃப் இந்தியா ஜூன் 9, 2017 இல் வெளியிட்டது.)

காந்தி இந்தியாவிற்கு வந்த பிறகு, காந்தியின் காலைப் பிடித்து விடுதலை ஆகிவிடலாம் என்று கனவு காண்கிறார் சாவர்க்கர். இரண்டு முறை காந்திக்கு கடிதம் எழுதுகிறார். அதற்கு காந்தியும் பதில் எழுதுகிறார். 1920 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் தேதி காந்தி சாவர்க்கருக்கு பதில் எழுதிய ஒரு நான்கு வரி கடிதம் அவரது ‘யங் இந்தியா’ பத்திரிக்கையில் வெளி வந்து இருக்கிறது. அந்தக் கடிதத்தில் காந்தியார், சாவர்க்கரிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டு வெளியே வாருங்கள் என்று சொல்லவே இல்லை. மாறாக, ‘நீங்கள் அரசியல் காரணத்திற்காகவே தண்டனை அனுபவிப்பதாக கூறுகிறீர்கள். உங்களுக்கு ஆலோசனை கூறுவது எனக்கு மிகவும் கடினமானது. இந்த வழக்கை பொது மக்கள் கவனத்திற்கு திருப்புவது மட்டுமே இன்றைய நிலையில் செய்யக்கூடிய ஒன்றாகும். மற்றபடி என்னுடைய வழியில் இந்தப் பிரச்சனையை நான் அணுகுவேன்’. இது தான் காந்தி தந்த பதில். மன்னிப்புக் கேட்டுக் கொண்டு வாருங்கள் என்று காந்தி எந்த இடத்திலும் சொல்லவே இல்லை. (ஆதாரம் காந்தியின் கருத்து தொகுப்புகள் 19 மற்றும் 20 ஆவது தொகுதிகளில் இந்தக் கடிதம் இடம் பெற்று இருக்கிறது.)

இனி இராஜ்நாத்சிங் இப்படியும் பேசலாம். 1948 ஆம் வருடம் ஜனவரி மாதம் 30 ஆம் தேதி “தன்னைக் கொல்வதற்கு சதித் திட்டம் ஒன்றைத் தீட்டி கோட்சேவை அனுப்பி வையுங்கள், அவர் துப்பாக்கியால் சுட்டு நான் மரணத்தை ஏற்றுக் கொள்கிறேன்” என்று காந்தி கூறினார்; அந்த அடிப்படையில் தான் சாவர்க்கர் சதித் திட்டத்தை தீட்டினார் என்று கூட இராஜ்நாத் சிங் பேசினாலும் வியப்பதற்கு இல்லை.

### பார்ப்பான் பணக்காரனானால்...



எனது சுயமரியாதை திராவிடர் கழகத்தின் பிரச்சாரத்தின் கருத்து என்னவென்றால், ஒரு பார்ப்பான் கூட மேல்சாதியான் என்பதாக இருக்கக் கூடாது என்பதற்காகத்தானே தவிர, ஒரு பார்ப்பான் பணக்காரனாகக் கூடாது, அவன் நல்வாழ்வு வாழக் கூடாது, அவன் ஏழையாகவே இருக்க வேண்டும் என்பதல்ல.

ஒவ்வொரு பார்ப்பானும் இராஜா சர் அண்ணா மலைச் செட்டியார், பொப்பிலி இராஜா, சர் சண்முகம் செட்டியார், சர் இராமசாமி முதலியார் போன்றவராக கோடீஸ்வரனாகவும், இலட்சாதிபதியாகவும் ஆகிவிட்டாலும் சரியே, எனக்கு ஆட்சேபணையில்லை. ஆனால், எந்தப் பார்ப்பானும் மடாதிபதிகள் உட்பட எவரும் சிறிது கூட எவரும் நமக்கு மேல் சாதியினன் என்பதாக இருக்கக்கூடாது என்பதுதான் எனது நோக்கம்.

குடி அரசு 09.11.1946

## பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து பா.ஜ.க. ஆட்சி வரை (12)

# ‘சுதந்திர இந்தியாவில்’ பறிக்கப்பட்ட மாநில உரிமைகள்

*பிரிட்டிஷ் இந்தியாவில் ‘இந்தியா’ கட்டமைக்கப்பட்ட வரலாறு; பிரிட்டிஷ் அரசு மாகாணங்களுக்கு வழங்கிய உரிமைகள்; கொண்டு வரப்பட்ட சீர்திருத்தங்கள்; பா.ஜ.க.வின் முன்னோடியான இந்து மகாசபை, ஆர்.எஸ்.எஸ். பிரிட்டிஷ் ஆட்சியிடம் காட்டிய நெருக்கம் போன்ற வரலாற்றுச் செய்திகளை இதுவரை சுருக்கமாகப் பார்த்தோம். ‘சுதந்திர’ இந்தியா, மாநிலங்களின் உரிமைகளை பறிக்கத் தொடங்கிய வரலாற்றை சுருக்கமாகப் பார்ப்போம்.*

**விடுதலை இராசேந்திரன்**

மாநிலங்கள் நிதி திரட்டித் தருபவைகளாகவும், ஒன்றிய ஆட்சியோ மாநில அரசுகள் அதைப் பயன்படுத்தவிடாமல் தடுப்பதுமான நிலை நீடித்து. மாநிலங்கள் திரட்டித் தரும் நிதி, ஒன்றிய அரசு வெளிநாடுகளிலிருந்து வாங்கும் கடன் அனைத்தும் ஒன்றிய அரசுக்குப் போகின்றன. அந்த நிதியை திட்டக் குழு, நிதிக் குழு, ஒன்றிய அமைச்சகம் வழியாக மாநில அரசுகளுக்கு வழங்குகிறது. நிதிகளைத் திரட்டித் தரும் மாநில அரசுகள் அதைப் பயன்படுத்தும் அதிகாரங்களற்றவைகளாயின. ஒன்றிய அரசு வசூலிக்கும் வரிகள், கூடுதல் வருவாய் தருவதாகவும், மாநில அரசின் வரிகள் குறைந்த வருவாய் வருவதாகவும் இருந்தன. (இப்போது ஒட்டு மொத்தமாக ஜி.எஸ்.டி. வழியாக மாநிலங்களின் வரி விதிப்பு உரிமைகளையே ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி மாற்றி அமைத்துவிட்டது. இது குறித்து அடுத்த பகுதியில் விளக்குவோம்)

இது மட்டுமின்றி மாநில அரசின் அதிகாரங்களும் பறிக்கப்பட்டன. பிரிட்டிஷ் ஆட்சியில் மாண்டேகு செம்ஸ் போர்டு சீர்திருத்தங்களின்படி மாநில உரிமைகளாக இருந்த அறநிலையங்கள், அறக்கட்டளைகள், சமய கட்டளைகளை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் சுதந்திரத்துக்குப் பிறகு ஒன்றிய அரசு வசம் போய்விட்டது. தேசிய நெடுஞ்சாலைகள் ஒன்றிய அரசிடம் போய்விட்டன. தேசிய நீர் வழி என்று நாடாளுமன்றம் அறிவிக்கும் நீர் வழிகள் மீதும் அதில் செலுத்தப்படும் கலன்களான படகு, கப்பல்கள் மீதும் மாநில அரசுகளுக்கு அதிகாரமில்லை. இந்திரா பிரதமராக இருந்தபோது 1974 ஜூன் 28, இந்தியாவுக்கு சொந்தமான கச்சத் தீவை, மாநில அரசின் கடும் எதிர்ப்புகளை மதிக்காமல் மாநில அரசுகளிடம் கலந்தாலோசிக்காமலேயே இலங்கைக்கு ‘தாரை’ வார்த்தார். இதைக் கண்டித்து 1976 ஆகஸ்டில் தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மாநிலங்களுக்கான உரிமைகளை வலியுறுத்தி வந்த முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி, மாநில சுயாட்சி பற்றி ஆராய்ந்து அறிக்கை தர நீதிபதி ராஜமன்னார் தலைமையில் ஒரு குழுவை நியமித்தார்.

மாநில சுயாட்சியை வலியுறுத்தும் அந்த அறிக்கையின் அடிப்படையில் தமிழக சட்டமன்றத்தில் 1974 ஏப்.16 அன்று மாநில சுயாட்சி தீர்மானம் தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்டு நடுவண் ஆட்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. “உண்மையான கூட்டாட்சி முறையை உருவாக்கும் அடிப்படையில் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டும்” என்று அத்தீர்மானம் வலியுறுத்தியது. (சட்டசபையில் அ.தி.மு.க. இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கவில்லை. குப்பைக் கூடையில் தூக்கி எறிய வேண்டிய அறிக்கை என்று சட்டசபையில் பேசியது மிகப் பெரும் சோகம்)

மாநில சுயாட்சி தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய முதல்வர் கலைஞர் கருணாநிதி, சட்டமன்றத்தில், மத்திய அரசு மாநில கோரிக்கைகளைப் புறக்கணிப்பதைப் பட்டியலிட்டார். 1973-74இல் மால்கோ நிறுவனத்தை தேசியமயமாக்க வேண்டும் என்ற மாநில அரசின் கோரிக்கை, தொழிலாளிகளுக்கு நிர்வாகத்தில் பொறுப்பு, முதலீட்டில் பங்கு கோரி தமிழக அரசு நிறைவேற்றிய மசோதாவுக்கு மத்திய அரசு ஒப்புதல் தராததையும் சோளம், கம்பு போன்ற சிறு தானியங்களை ஒரு மாநிலத்திலிருந்து வேறு மாநிலத்துக்குக் கொண்டு செல்ல இருந்த தடையை மாநில அரசை கலந்து ஆலோசிக்காமலே நீக்கியதையும், எண்ணெய் டெப்போக்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் செய்யும் மாநில உரிமையை திடீரென்று பறித்ததையும் சுட்டிக் காட்டினார். குறிப்பாக தமிழ்நாட்டு உரிமைகள் பறிக்கப்பட்டதை நீண்ட பட்டியலிடலாம் என்றாலும் அது மிக நீண்ட விரிவாகிவிடும் என்று உதாரணத்துக்கு மட்டும் சிலவற்றை சுட்டிக் காட்டினோம். பொதுவான உரிமை பறிப்புகளை கீழ்க் கண்டவாறு பட்டியலிடுகிறோம்.

- மாநில அரசு சட்டம் இயற்றினாலும் ஆளுநர் கையெழுத்திட்டு ஏற்பு வழங்க வேண்டும்.
- ஆளுநர், மாநில அரசும் இயற்றும் எந்த சட்டத்துக்கும் ஒப்புதல் தராமல் கால வரம்பின்றி கிடப்பில் போட்டு வைக்கலாம்.

> - *பிரிட்டிஷ் ஆட்சி மாநிலங்களுக்கு வழங்கிய அறக்கட்டளை, தேசிய நெடுஞ்சாலை, தேசிய நீர் வழி உரிமைகள் மத்திய அரசிடம் போய் விட்டது.*
> - *பிரிட்டிஷ் இந்தியாவில் துறைமுகம், அஞ்சலகம் உள்ளிட்ட ஒன்றிய ஆட்சி அதிகாரத்துக்குட்பட்ட நிறுவனங்களில் தமிழ்நாட்டுக்கு மட்டும் இருந்த பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு, சுதந்திரம் பெற்ற சில மாதங்களிலேயே நீதிமன்றம் வழியாக பார்ப்பனர்கள் பறித்தார்கள்.*

- மாநிலங்களில் குடியரசுத் தலைவர் ஆட்சி அறிவிக்கப்பட்டு மாநில அதிகாரங்களை நாடாளுமன்றம் எடுத்துக் கொள்ளலாம்.
- வெளிநாடுகளுடன் ஒன்றிய அரசு செய்து கொள்ளும் உடன்பாட்டில் மாநிலம் தொடர்பான பிரச்சினைகள் இருந்தால் உடனே அது ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் மாறிவிடுகிறது.
- அரசியல் சட்டம் 249ஆவது பிரிவின்படி நாட்டு நலன் கருதி மாநில உரிமைப் பட்டியலில் உள்ள கூறுகளை ஒன்றிய அரசு அபகரித்துக் கொள்ளலாம்.
- சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது என்று கூறி மாநில அரசைக் கலைத்து ஒன்றிய அரசு கட்டுப்பாட்டின் கீழ் மாநிலங்களைக் கொண்டு வர முடியும்.
- காவல்துறை மாநிலங்களின் உரிமையில் வருகிறது. அதையும் மீறி ஒன்றிய அரசு ‘ஒன்றிய ரிசர்வ் போலீஸ்’ படையை வைத்திருக்கிறது. மாநிலங்கள் அனுமதி பெறமலேயே அப் படையை மாநிலங்களுக்குள் அனுப்பலாம்.
- நாடாளுமன்றம் இயற்றுகிற சட்டங்களுக்கு மாநிலங்கள் கட்டுப்பட வேண்டும். அதற்கான கட்டளைகளை ஒன்றிய அரசு அவ்வப்போது பிறப்பிக்கும் (பிரிவு 256).
- இந்தி ஆட்சி மொழியாவது குறித்து, நாடாளுமன்றத்தின் ஆட்சி மொழிக் குழு அளிக்கும் பரிந்துரைகளை செயல்படுத்த குடியரசுத் தலைவர் கட்டளைகளைப் பிறப்பிக்கலாம் (பிரிவு 344 கீழ்).
- அரசியல் சட்டத்தின் 18ஆவது பிரிவு நாட்டில் நெருக்கடி நிலையை அறிவித்து அடிப்படை உரிமைகளையே நிறுத்தி வைக்கலாம் என்று கூறியது. இந்திரா பிரதமராக இருந்தபோது நெருக்கடி நிலையை அறிவித்து சர்வாதிகார ஆட்சியை நடத்தினார். தொடர்ந்து வந்த மொரார்ஜி தலைமையிலான ஜனதா கட்சி ஆட்சி, இந்தக் கொடூரமான சட்டப் பிரிவை எதிர்காலத்தில் செயல்படுத்தாமல் முடக்கி, சட்டத் திருத்தம் செய்தது என்பது வரலாறு.
- அந்த நெருக்கடி நிலை காலத்தில் தான் மாநில உரிமைப் பட்டியலில் இருந்த கல்வி, பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டு, ஒன்றிய அதிகாரக் குவிப்பில் சேர்க்கப்பட்டது. அதன் பாதிப்புகளைத்தான் இப்போது பார்க்கிறோம். மோடி ஆட்சியின் மக்கள் விரோதக் கல்வித் திட்டங்கள் வழியாக தமிழ்நாடு அனுபவித்துக் கொண்டிருக்கிறது.
- 356ஆவது சட்டப் பிரிவு தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில ஆட்சியைக் கலைத்து குடியரசுத் தலைவர் ஆட்சியை நடத்த வழி வகுக்கிறது. ஆட்சிக் கவிழ்ப்பு உத்தரவுக்கு ஆளுநர் கையெழுத்திட வேண்டும். அபூர்வமாக சில நேர்மையான ஆளுநர்கள் கையெழுத்திட மறுத்தால் குடியரசுத் தலைவர் கையெழுத்திட்டு மாநில அரசை முடக்கி விடலாம். அதற்கு ‘otherwise’ என்ற சொல் சட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் 1991ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியை டிஸ்மிஸ் செய்ய ஆளுநராக இருந்த சுர்ஜித் சிங் பர்னாலா மறுத்தபோது குடியரசுத் தலைவராக இருந்த ஆர். வெங்கட்ராமன் கையெழுத்திட்டு தி.மு.க. ஆட்சியைக் கலைத்தார் என்பது வரலாறு.
- அரசியல் நிர்ணய சபையில் மாநில ஆளுநரை மக்களே வாக்களித்துத் தேர்ந்தெடுக்கலாம் என்ற முடிவு தான் அரசியல் நிர்ணய சபையில் மேலோங்கியிருந்தது. பிறகு இப்படி ஒரு நிலை வந்து விட்டால் மாநிலங்கள் தனியே பிரிந்து போய்விடும் ஆபத்துகள் உருவாகலாம். மத்திய அரசின் பிடி தளர்ந்து விடும் என்று நேரு, ராஜேந்திர பிரசாத், டி.டி. கிருஷ்ண மாச்சாரி போன்ற செல்வாக்குள்ள தலைவர்கள் அஞ்சியதால் நியமன முறைக்கு மாற்றி விட்டார்கள்.
- திட்டக் குழு, நிதிக் குழு, வரி வருவாய் போன்றவற்றில் ஏற்கனவே அமுலில் இருந்த சட்டங்கள் மாநிலங்கள் மத்திய அரசிடம் கையேந்தும் நிலையை உருவாக்கி வைத்திருந்தன. இப்போது மோடி ஆட்சியில் நிலைமை இன்னும் மோசமாகி (bad to worse) மாநிலங்களிலும் அடையாளங்களையே முற்றாக அழிக்கப்படும் ஆபத்துகள் தலைதூக்கி நிற்கின்றன.

(தொடரும்)


“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகை யாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049 newsdvk@gmail.com

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# சைவம் – வைதீகத்தை எதிர்க்கிறதா?

*தமிழர்களின் மதம் சைவம் – வைணவம். எனவே தாய் மதத்துக்கு இஸ்லாமியரும் கிறிஸ்தவரும் திரும்ப வேண்டும் என்று, நாம் தமிழர் கட்சி கூறுகிறது. தமிழ்த் தேசிய பேரியக்கம் சைவத்தை தமிழர்களின் மெய்யறிவு என்று கூறுகிறது. சைவம் ஆரியத்தைத் துண்டித்து விட்டதா என்கிற கேள்வியை எழுப்பி 1928லேயே பெரியார் ‘குடிஅரசு’ ஏட்டில் எழுதிய தலையங்கத்தை இப்போது எழுந்துள்ள விவாதங்களுக்கு விளக்கமாக வெளியிடுகிறோம்.*

நம் நாட்டு சைவர்கள் பெரும்பாலும் தாங்கள் ‘பார்ப்பன மதத்தை வெறுக்கின்றோம்’ என்கின்றார்கள். அன்றியும் பார்ப்பனர்களது மத ஆதாரம் என்பவைகளாகிய நான்கு வேதங்கள் என்பதையும் சைவர்கள் தங்களுக்கு சம்பந்தப்பட்டதல்ல என்கின்றார்கள். பார்ப்பனர்களின் “மோக்ஷ”சாதனமான வேள்விச் சடங்குகளையும் தாங்கள் ஒப்புக் கொள்கின்றதில்லை என்கின்றார்கள். மற்றும் புராணங்கள் என்பவைகளையும் ஆரிய சாஸ்திரங்கள் என்பவைகளையும் தாங்கள் ஒப்புக் கொள்ள முடியாது என்பதுடன் அவைகள் பொய் என்றும் கற்பனை என்றும் சொல்ல முன் வந்திருக்கின்றார்கள். பார்ப்பன ஆச்சாரியார்களும் அதாவது சங்கராச்சாரி போன்றார்களும் தங்களுக்கு சம்மந்தப்பட்டவர்கள் அல்ல என்றும் சொல்லுகின்றார்கள்.

மற்றும் எவ்வளவோ, அதாவது, “ஆரியன் கண்டாய்! தமிழன் கண்டாய்!” என்று ஆரியத்தையும் தமிழையும் பிரித்து ஆரியத்திற்கும், தங்களுக்கும் தங்கள் சைவ மதத்திற்கும் சிறிதும் சம்மந்தமில்லை என்றும் தாங்கள் தனித்தமிழ்ச் சமயத்தார் என்றும் சொல்லிக் கொள்ளுவதுடன் அதற்கு வேண்டிய ஆதாரங்களையும் கண்டு வைத்திருக்கின்றார்கள். உதாரணமாக ‘தென்னாட்டு சிவனே போற்றி’ என்றும் பிரித்துச் சொல்லுகின்றார்கள். எனவே இந்நிலையில், சைவ மதம் என்றால் என்ன?

முதலாவதாக, கற்பனை என்றும் பொய் என்றும் ஆபாசமென்றும் அசம்பாவிதம் என்றும் சொல்லும்படியான கந்தபுராணம், சிவமகா புராணம் முதலாகிய புராணங்களை ஒதுக்கி விட்டு பார்த்தால் சிவனுக்கோ, சைவத்திற்கோ ஏதாவது கடுகளவு இடம் இருக்கின்றதா என்பதை கூர்ந்து நோக்கும்படி வாசகர்களை கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இரண்டாவதாக, இந்து மதத்தையோ, வைணவ மதத்தையோ, சைவ மதத்தையோ தனித்தனியாகவோ பொதுவாகவோ எடுத்துக் கொண்டு பார்ப்போமானால் அவைகளிலுள்ள பொதுவான கடவுள்களும், வைணவ, சைவ கடவுள்களும், சுரர்கள் என்னும் “தேவர்”களின் வேள்வி என்னும் யாகத்தை அழித்து வந்த அசுரர்கள் என்னும் “அரக்கர்களை” கொன்று வென்று யாகத்தைக் காக்க வந்தது என்கின்ற அஸ்திவாரம் தவிர வேறு மார்க்கத்தில் வந்த கடவுள்கள் ஏதாவது எங்காவது இருக்கின்றனவா? என்று பார்க்கும்படி வேண்டுகின்றோம்.

அல்லது பார்ப்பனர்கள் என்னும் ஆரியர்களின் வேதத்தை ஒப்புக் கொள்ளாததினாலோ, நிந்தித்ததினாலோ உலகம் “நீதியும் ஒழுக்கமும் கெட்டுப் போய் விட்டது” என்று சொல்லிக் கொண்டு அவதாரம் செய்ததாகவோ தோன்றியதாகவோ அல்லாமல் வேறு வழியில் வந்த ஏதாவது கடவுள்கள் உண்டா? இருக்கின்றனவா?

இந்து, வைணவ, சைவ சமய சம்மந்தமான எந்த புராணமும் இதைத் தவிர வேறு என்ன காரணங்களாவது கற்பிக்கின்றனவா?

உதாரணமாக, சைவ சமயச்சாரியார்கள் என்பவர்களும், “வேத வேள்வியை மக்கள் நிந்தனை செய்ததால் தோன்ற வேண்டியவர்களா னார்கள். வேத வேள்வியை நிந்தனை செய்த மக்களையும் அழித்து வேத வேள்விச் சமயத்தையும் கடவுள்களையும் ஆதரிக்க வேண்டியவர்களானார்கள்” என்பதை யாராவது மறுக்க முடியுமா என்று கேட்கின்றோம்.

மற்றும் வேதத்தையும் வேள்வியையும் தள்ளிவிட்டு அவற்றைக் காப்பாற்ற வந்த கடவுள்களையும் தள்ளிவிட்டு ஆரியர்களால் புனையப்பட்டது என்கின்ற புராணங்களையும் தள்ளிவிட்டால், தேவாரத்திற்கோ, திருவாசகத்திற்கோ மற்றும் “தமிழ் மறை”க்கோ எங்காவது இடமிருக்கிறதா என்று கேட்கிறோம்.

சிவம், சைவம், ஆகமம், தேவாரம், திருவாசகம் என்ற வார்த்தைகளும் ஆரியத்தை அடிப்படையாகக் கொண்டவை என்னும் வழக்கை சுலபத்தில் தள்ளிவிட முடியாது. மற்றும் சைவக் கடவுள்கள் பெயரும் அக்கடவுள்களின் பெண்ஜாதி பிள்ளைகளின் பெயரும் அனேகமாய் முழுதும் ஆரியபாஷைப் பெயர்களே தவிர வேறில்லை. மற்றும் அப்பெயர்களுக்கு ஏற்ற காரணங்களும் அக்காரணங்களுக்கு ஆரியர்களால் கற்பிக்கப்பட்ட கதைகள்தான் ஆதாரமே ஒழிய வேறில்லை. மற்றும் அப்பெயர்களுக்கும் கதைகளுக்கும் ஏற்படுத்தப்பட்ட புராணங்கள் என்பவைகளும் பெரிதும் ஆரிய மூலத்திலிருந்து மொழி பெயர்த்ததாகச் சொல்லப்படுப்பவைகளேயல் லாமல் வேறல்ல.

நிற்க. சைவ சமயம் தென்னாட்டில் பரவி இருக்கின்ற அளவு மற்ற நாட்டில் அதாவது வடநாட்டில் பரவி இருப்பதாக சொல்ல முடியுமா? வட நாடு முழுவதும் ஏறக்குறைய வைணவ மதம் என்றே சொல்ல வேண்டும்.

தென்னாட்டில் மாமிசம் சாப்பிடாதவனுக்கு எப்படி சைவன் என்று சொல்லப்படுகின்றதோ அதுபோல வடநாட்டில் மாம்சம் புசிக்காதவனுக்கு வைஷ்ணவன் என்று சொல்லுவதுண்டு.

தென்னாட்டிலும் சமயத்தை ஏற்றுக் கொண்டவர்கள் சிலர் என்றுதான் சொல்லவேண்டும். அதிலும் சைவ சமயத்தார்களோ சைவ சமயம் இன்னது என்று அறிந்தவர்களோ வெகு சிலர் என்றுதான் சொல்லவேண்டும். பாக்கியுள்ள மக்கள் அதாவது 100க்கு 90 பேர்கள் மாரி, கருப்பன், மாடன், மதுரை வீரன், பேச்சி என்பது போன்ற கடவுள் வணக்கக்காரரும் மற்றும் ஒரு சிலர் சைவ வைணவக் கடவுள்களையும் இக்கூட்டத்தில் சேர்த்துக் கொண்டிருக்கின்றவர்களுமே தவிர வேறல்ல.

ஏதோ பழைய காலத்து அரசர்கள் தங்கள் மடமையினால் கட்டி வைத்த கோவில்களும் அவர்கள் விட்ட சொத்துக்களால் நடக்கும் உற்சவங்களும், இப்போது சில கொடுமைக்காரர்கள் மக்களிடைத்திலிருந்து அநியாய வழிகளில் கொள்ளையடித்து சம்பாதித்த பணத்தைக் கொண்டு கீர்த்திக்கும் தங்களை உயர்த்திக் கொள்வதற்கும் சிலர் தாங்கள் செய்த கொடுமையினால் ஏற்படும் பாவத்தைத் தொலைப்பதற்கும் என்று பழுது பார்ப்பதும் புதுப்பிப்பதும் இல்லாவிட்டால் இவ்வளவு பெருமைகள் கூட சொல்லிக் கொள்ள வகை இருக்காது என்றே சொல்லலாம்.

சமயம் என்பதும், வைணவம் என்பதும், சைவம் என்பதும் என்ன என்று பொதுவாக யோசிக்குமிடத்தில் பார்ப்பனர்களுக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு தங்களை அறியாமல் பார்ப்பனியத்திற்கும் பார்ப்பன ஆதிக்கத்திற்கும் உழைக்கும் சாதனங்களா அல்லவா என்பதை நிதானித்து நடுநிலைமையில் இருந்து பார்த்தால் யாருக்கும் விளங்காமல் போகாது.

எனவே இப்படிப்பட்ட சைவத்தைப் பற்றியோ சமயத்தைப் பற்றியோ ஏதாவது எழுத நேரிடுவதால் “நாட்டின் க்ஷேமத்திற்கோ மக்களின் மோட்சத்திற்கோ” எவ்விதமான ஆபத்துக்கள் எப்படி நேரிட்டு விடும் என்பதைப்பற்றி விருப்பு வெறுப்பின்றி நிதானமாய் யோசித்துப் பார்க்கும்படி வாசகர்களை வேண்டிக் கொள்ளுகின்றோம்.

**‘குடி அரசு’ தலையங்கம் – 07.10.1928**

## வினா விடை

- *நமது தாய் மதமாகிய சைவத்துக்கும் வைணவத்துக்கும் எல்லோரும் திரும்புவோம்.* – ***சீமான்***

  *அப்போ இனிமேல் கறி, மீன் எல்லாம் சாப்பிடக் கூடாதா அண்ணே!*

- *என்னை ‘பாசிஸ்ட்’ என்று எவனாவது சொன்னால் செருப்பால் அடிப்பேன்.* – ***சீமான்***

  *அண்ணே, கோபிச்சுக்காதீங்க... இதுக்குப் பேர் தான் அண்ணே பாசிசம்.*

- *நாங்கள் உள்ளாட்சி தேர்தலில் தோற்றதால் நாங்களே கவலைப் படவில்லையே, உனக்கு ஏன் பதட்டம்?* – ***சீமான்***

  *நீங்க எப்போதுமே கவலைப்படாமல் ‘சந்தோஷமாக’ இருக்கணும்ங்கிற ஆசையினால்தான் அண்ணே!*

- *என்னுடைய கோத்திரம் சிவகோத்திரம்; மதம் சைவம்.* – ***சீமான்***

  *அப்படியே ஜாதி, பிறந்த நட்சத்திரம், லக்கனம் எல்லாம் சொல்லிடுங்கண்ணே! பஞ்சாங்கத்துலே பார்த்து, ‘தமிழ்த் தேசியம்’ கிடைக்குமா கிடைக்காதான்னு தெரிஞ்சுக்கிறதுக்கு வசதியா இருக்கும்.*

- *வரலாற்றிலே திராவிடத்துக்கு வந்த முதல் எதிரி நான் தான்; அதனால் தான் நடுங்குறாங்க...* – ***சீமான்***

  *அச்சச்சோ... இந்த வரலாற்று நாயகனின் அருமை புரியாம பஞ்சாயத்துல ஓட்டுப் போட மாட்டோம்னு மக்கள் அடம் பிடிச்சாங்களே, அண்ணே, அத நினைச்சா தான் துக்கம் தொண்டையை அடைக்குது!*

- *இஸ்லாமும் கிறிஸ்தவமும் வெளிநாட்டு மதங்கள்; நமது மதங்கள் அல்ல.* – ***சீமான்***

  *அதுக்காக நீங்க போட்டிருக்கிற பேண்ட் சட்டையை கழட்டி விட்டு, மர இலை தலைகளை சுற்றிக் கொண்டு இது தான் தமிழர் அடையாளம் என்று மட்டும் சொல்லிடாதீங்க பிளீஸ்...*

## தமிழர் இந்துவா? தமிழ்த் தேச நடுவம் நடத்திய கருத்தரங்கம்



தமிழ்த் தேச நடுவம் சார்பில் ‘தமிழ் இந்து...?’ என்ற தலைப்பில் சென்னை பத்திரிகையாளர் மன்றத்தில் அக்.17, 2021 அன்று மாலை கருத்தரங்கம் நடைபெற்றது. ‘தமிழ் இந்து’ என்று பேசத் தொடங்கியிருக்கும் ‘தமிழ்த் தேசப் பேரியக்கம்’ இஸ்லாமியர் கிறிஸ்துவர், தாய் மதம் திருப் வேண்டும்; தமிழர் மதம் சைவம், வைணவம் தான்” என்று பேசும் நாம் தமிழர் கட்சிக்கும் பதில் தரும் கருத்தரங்கமாக இது இருந்தது. பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் பொழிலன் தலைமையில் வாலாஜா வல்லவன், விடுதலை இராசேந்திரன், பேராசிரியர் ஜெயராமன் உரையாற்றினர். தோழர் தியாகுவின் உரை காணொளி வழியாக ஒளிபரப்பப்பட்டது. அரங்கு நிரம்பி வழிந்தது.

**‘முழக்கம்’ நன்கொடை :** *‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வளர்ச்சிக்காக கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி – தலா ரூ.10,000/- நன்கொடை வழங்கியுள்ளார்கள். முழக்கம் இதழ் தொடர்ந்து வெளி வர தோழர்கள் ஆதரவை வேண்டி நிற்கிறது. (ஆசிரியர்)*

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 21st October 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN